

# புனித லூர்து மாதா தேவாலயம்




45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org


**திருத்தந்தையின் கருத்து : இளம் வயதினர்: தங்களின் தேவஅழைப்பிற்கு தாராள மனதுடன் பதிலளிக்கவும் குருத்துவம் அல்லது அர்ப்பண வாழ்விற்கு தங்களை இறைவனிடம் ஒப்புவிக்க சீரியமாக கருதவும் வேண்டுமென்று**

**ஏப்ரல் மாத கரு : கடவுளின் வாக்குறுதியை கொண்டாடுதல்**

**பங்கில் திருப்பலிகள்**

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| ஏப் 9 ஞா | காலை 8.30<br>காலை 11.00 | திருப்பலி (ஆ)<br>திருப்பலி (ம) | குருத்து ஞாயிறு: குருத்தோலைகளை கெபியில் ஆசீர்வதித்தல்<br>குருத்து ஞாயிறு: குருத்தோலைகளை கெபியில் ஆசீர்வதித்தல் |
| ஏப் 10 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித வாரநாள் |
| ஏப் 11 செவ் | மாலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித வாரநாள் |
| ஏப் 13 வியா | மாலை 5.00<br>மாலை 7.30<br>இரவு 9.00~12.00 | திருப்பலி (த)<br>திருப்பலி (ஆ)<br>ஆராதனை | பெரிய வியாழன்<br>பெரிய வியாழன்<br>திருவிழிப்பு |
| ஏப் 14 வெள் | காலை 11.30<br>மாலை 2.30<br>மாலை 6.00<br>இரவு 9.00 | சிலுவைப்பாதை (ஆ,த)/ சடங்கு (ஆ,த)<br>சிலுவைப்பாதை (த)/ சடங்கு (த)<br>சிலுவைப்பாதை (ஆ)/ சடங்கு (ஆ)<br>மாலை செபம் (ஆ, த) | இயேசுவின் பாடுகள் பற்றிய சடங்கு<br>இயேசுவின் பாடுகள் பற்றிய சடங்கு<br>இயேசுவின் பாடுகள் பற்றிய சடங்கு<br>TENEBRAE - இருளின் சடங்கு |
| ஏப் 15 சனி | இரவு 7.00<br>இரவு 10.30 | திருப்பலி (ஆ)<br>திருப்பலி (த) | ஆயத்த அருட்சடங்குடன் பாஸ்கா திருவிழிப்பு<br>பாஸ்கா திருவிழிப்பு |
| ஏப் 16 ஞா | காலை 9.00<br>காலை 11.00 | திருப்பலி (ஆ)<br>திருப்பலி (ம) | உயிர்ப்பின் ஞாயிறு<br>உயிர்ப்பின் ஞாயிறு |

**பங்கு நடவடிக்கைகள்**

| | | | |
|---|---|---|---|
| ஏப் 9 ஞா | மதியம் 1.00<br>மாலை 6.00 | ஆலயம்<br>ஆலயம் | புனித அகஸ்டின் பாடல்குழு பயிற்சி (த)<br>பாடல்குழு (ஆ) |
| ஏப் 10 திங் | மாலை 7.00<br>மாலை 7.30<br>மாலை 7.45 | பெர். மை 1-2<br>ஆலயம்<br>பெர். மை 1-3 | புனித வாரத்திற்கான விளக்கவுரை<br>RCIA- ஒத்திகை<br>நற்கருணை பணியாளர்கள் கூட்டம் |
| ஏப் 11 செவ் | காலை 8.30<br>மாலை 8.00 | பெர். மை 1-3<br>முனிசிபல் | பங்கு பரிந்துரை செபம்<br>அருங்கொடை (த) |
| ஏப் 12 புதன் | மாலை 8.00<br>மாலை 8.00<br>மாலை 8.00<br>மாலை 8.00 | ஆலயம்<br>பெர். மை 1-3<br>பெர். மை 1-1<br>ஜெலாப்பாங் | புனித அகஸ்டின் பாடல்குழு பயிற்சி (த)<br>பெற்றோர்கள் ஆதரவாளர்கள் குழு கூட்டம்<br>அருங்கொடை (த)<br>அருங்கொடை (த) |
| ஏப் 15 சனி | காலை 9.00<br>காலை 10.00 | பெர். மை 1-1/ ஆலயம்<br>பெர். மை 2-5 | புகழாராதனை/ சடங்கு: எபெத்தா/ ஒத்திகை<br>சீடத்துவ நிகழ்வு |
| **9 & 16 ஏப்ரல் 2017 மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது. மீண்டும் 23 ஏப்ரல் 2017 வழக்கம்போல் வகுப்புகள் நடைபெறும்.** | | | |

<u>ஏப்ரல் மாத திருமணங்கள் 2017</u>

ஏப் 27 மாலை 4.30 சடங்கு (ஆ) ரேமன்ட் த/பெ பிரான்சிஸ் & மாலனி த/பெ சின்னத்தம்பி

ஏப் 29 மாலை 4.30 திருமணம் (ஆ) ஜோவெல் ராஜ் த/பெ ஜோசப் ஸ்டீபென் & மேரி ஏன் மெலிசா த/பெ ஜெயவீரன்

ஏற்பாடு செய்யப்பட்டுள்ள திருமணத்தில் யாருக்காவது ஆட்சேபம் இருந்தால் குருவானவரிடம் உடனடியாக தெரிவியுங்கள்.

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. பங்கு அலுவலகம்:** கவனத்திற்கு பாஸ்கா திருவிழாவையொட்டி பங்கு அலுவலகம் மூடப்பட்டிருக்கும். ஏப்ரல்: 13 (வியா - 1/2 நாள்) முதல் 14 (வெள்ளி), 16 (ஞாயிறு)

**2. மெழுகுவர்த்திகள்:** புலூமா மகளிர் குழு பாஸ்கா திருவிழிப்பு மற்றும் பாஸ்கா காலை திருப்பலிகளில் மெழுகுவர்த்திகள் விற்பனை செய்கின்றது. தயவுசெய்து புலூமா மகளிருக்கு ஆதரவு தாருங்கள்.

**3. புனித வார விளக்கவுரை:** 10/4/17 (திங்) மாலை 7.00க்கு @ பெர். மை 1-2-ல் புனித வாரத்திற்கான விளக்கவுரை அனைத்து திருப்பலி மேற்பார்வையாளர், நற்கருணை பணியாளர்களின் பிரதிநி, உபசரிப்பு குழு பிரதிநிதி, பீடச்சிறுவர்கள் பிரதிநிதி, பாடல்குழு (ஆ, த) பிரதிநிதி, முன்னோன் வாசகர்கள் பிரதிநிதி ஆகியோருக்கு நடைபெறும்.

**4. முதியோர் திருமுழுக்கு 2016/ 2017:** பாஸ்கா திருவிழிப்பு திருப்பலி இரவு 7.00க்கு 30 முதியோர் திருமுழுக்கு வேட்பாளர்கள் வெவ்வேறு திருவருட்சாதனங்களை பெறுகின்றனர். வாருங்கள் அவர்களுக்காக மன்றாடுவோம்.

14 பேர் - திருமுழுக்கு/ உறுதிபூசுதல்/ நற்கருணை 16 பேர் - உறுதிபூசுதல்

**5. வாகனங்கள் நிறுத்தும் இடங்கள்:** தயவு செய்து வழிமுறைகளைப் பின்பற்றி உங்கள் வாகனங்களை வெஸ்லி மெத்தடிஸ்ட் பள்ளியிலும், Caltex அருகில் உள்ள B நுழைவாயிலையும் புனித வெள்ளி (14 ஏப்) திருப்பலிகள் மற்றும் பாஸ்கா திருவிழப்பு (15 ஏப்) திருப்பலிகளுக்கும் பயன்படுத்தலாம். உங்களது ஒத்துழைப்பிற்கு நன்றி!

**6. நன்றி**: புவிடிபா, அனைத்து பங்கு மக்களின் கொடைகளுக்காகவும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். திருவருகைக்கால உறைகளிலிருந்து **மொத்தம் வசூலிக்கப்பட்ட தொகை:** ரிம 8,902.00

**7. புனித செபஸ்தியார் சிற்றாலய திருவிழா**:

- புனித செபஸ்தியார் சிற்றாலய திருவிழாவின்போது மெழுகுவர்த்தி பெட்டிகளாக நன்கொடையாக செலுத்தலாம். விற்ற பணம் சிற்றாலய பராமரிப்பிற்காக பயன்படுத்தப்படும். தொடர்புக்கு: செபஸ்தியன் (010-3213236) /அந்தோணி (019-5600393)
- திருவிழாவின்போது கடைசி நாள் உணவிற்காக ரொக்கமாக நன்கொடைகளை கொடுக்க விருப்பமுள்ளவர்கள் தொடர்புக்கு: ரோபர்ட் ஜோன் (012-5085449)
- நவநாள் திருப்பலிகளின்போது உணவுகளை கொடுக்க விருப்பமுள்ளவர்கள் தொடர்புக்கு: அந்தோணி (019-5600393) தனிப்பட்ட முறையில் மற்றும் அதிச அளவில் புனித செபஸ்தியார் சிற்றாலய திருவிழாவிற்காக வசூலிக்கப்படாது. திருவிழாவிற்காக நன்கொடைகளை செலுத்த விருப்பமுள்ளவர்கள் பங்கு அலுவலகத்தில் செலுத்தலாம்.

**8. மதிய உணவு 2017 (சைவ & அசைவ உணவு வழங்கப்படும்): ஏற்பாட்டாளர்கள்:** அன்னை திரேசா வாசிப்பு மையம்.
**நாள்:** 30 ஏப்ரல் 2017, (ஞாயிறு) **நேரம்:** காலை 11.00 - 2.00 வரை **இடம்:** பங்கு மண்டபம், புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ. தயவு செய்து இந்த டிக்கெட்டுக்களை வாங்கி எங்கள் திட்டத்தை ஆதரிக்கவும். டிக்கெட் ஒன்றின் விலை ரிம 10/- மேலும் "ஏழைகளுக்கு அன்னதானம்" திட்டத்திற்கும் நீங்கள் டிக்கெட்டுகளை தானம் செய்யலாம். இவை ஏழைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்.
**தொடர்புக்கு:** அன்னை திரேசா வாசிப்பு மைய அலுவலகம் (05-2410751)

**9. பினாங்கு மறைமாவட்ட கத்தோலிக்க அருங்கொடை எழுச்சி கூட்டம் 2017:** கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சி 50ஆவது ஆண்டு விழா 29 ஏப் 2017 (சனி) காலை 8.00 ~ மாலை 5.30 வரை புக்கிட் மெர்தாஜாம், புனித அன்னம்மாள் ஆலயத்தில் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களின் தலைமையில் இந்த நற்கருணை கொண்டாட்டம் நடைபெறும். வந்து பரிசுத்த ஆவியின் வல்லமையை பெற்றுச் செல்லுங்கள். பதிவு கட்டணம்: ரிம 10/- (ஒரு நபருக்கு) தொடர்புக்கு: செபஸ்தியன் பிள்ளை (016-4425654) பேருந்து தொடர்புக்கு: சவரிமுத்து (012-4514690)

**10. தவக்கால பிரச்சாரம் 2017 நிகழ்வுகள்**: 9 ஏப் (6ஆம் வாரம்)- உணவுப்பொருட்களை பகிர்ந்தளித்தல்@ காலை 11.00@ பெ.மை 1-3

**11. ஆலயத்தினுள் அடிப்படை உடையணிதலும், நல்லொழுக்கமும்:** நீங்கள் திருப்பலிக்கு வரும்போது உடையணிவதில் பெருமை கொள்ளுங்கள். நீங்கள் ஆண்டவருக்கு மிகச்சிறந்தவற்றை வழங்க வேண்டும். குட்டையான கால் சட்டைகளோ, கையில்லாத பனியன்களோ கூடாது. திருப்பலியின்போது கைப்பேசிகள் பயன்படுத்துவதை நிறுத்தவும். அப்படி அவசரமாக பேச வேண்டியிருந்தால் தயவு செய்து வெளியே செல்லவும், இதனால் மற்றவர்களால் செபிக்க இயலும். திருப்பலியின்போது மின்னியல் கருவிகளைப் பயன்படுத்த வேண்டாம். மருத்துவ தேவையைத் தவிர்த்து ஆலயத்தில் இனிப்புகளையோ, மெல்லும் கோந்தையோ உட்கொள்ளாதீர்கள். இது புனிதமான ஆலயம் என்ற உங்களின் உணர்வை இழக்காதீர்கள். பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் மேற்படி நல்லொழுக்கத்தைப் பின்பற்றுவதை உறுதிசெய்யுங்கள்.

**12. எரிக்கப்பட்ட உடலின் சாம்பல் பகுதிகள்:** எரிக்கப்பட்ட எல்லா எஞ்சிய உடல் பகுதிகளும் ஆற்றில், கடலில் கரைக்க, குடும்ப உறுப்பினர்களிடையே பிரித்துக்கொள்ளவோ, உங்கள் வீட்டில் வைத்துக்கொள்ளவோ, அவர்களின் எலும்புகளை ஆபரணங்களாக செய்துக்கொள்ளவோ **அனுமதிக்கப்படாது**. இது கத்தோலிக்க விசுவாசத்திற்கு இணக்கமற்ற எதிரான செயலாகும்; **கத்தோலிக்க நடைமுறையும் அல்ல.** உடல்பகுதிகள் இறந்தோர் சாம்பலை வைக்க சுவற்றில் உள்ள அமைவுகளில் (Columbarium) **வைக்கவேண்டும்,** அல்லது கல்லறையில் புதைக்க வேண்டும் (உங்கள் தோட்டத்தில் அல்ல). இது உடலின் உயிர்ப்பை விசுவாசிக்கும் நோக்கமாகும். அப்படி ஒரு வேளை விசுவாசத்திற்கு எதிரான செயல்கள் இருந்தால், அடக்க சடங்குகள் மறுக்கப்படும்.

**13. விசுவாசத்தைக் கைவிடுதல்:** பிற கிறிஸ்துவ சபைகளில் அல்லது பிற மதத்தில் சேருவதற்காக கத்தோலிக்க திருச்சபையை விட்டு விலகியவர்கள் உங்களின் செய்கையினால் கத்தோலிக்க உரிமைகளை இழக்கின்றீர்கள்.

**14. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி மார்ச் 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **316,102.03** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **335,147.76** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும், வாரந்தோறும் அல்ல)

**02/04/17 திருப்பலி வசூல்கள்: காலை 7.00** - RM 1,273.50 **காலை 9.00** - RM 1,434.10 **தாசேக்–** RM 183.30 **மொத்தம்–** RM 2,890.90
**2015** - RM 10.00 **2017** - RM 685.00 **மொத்தம்–** RM 695.00 **ஏழைகளுக்கு–** RM 2,863.90
நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ என்று ஆங்கிலத்தில் எழுதவும்